30.06.2026 O.S. 480/2020 பி.வா.சா.2 நவநீதகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி சக்தி வேலாயுதம் என் நண்பர் என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு 10 ஆண்டுகாலமாக தெரியும். பிரதிவாதி மெடிக்கல் ஸ்டோர் வைத்துள்ளார். 1,2 வாதிகள் எந்த தேதியில் பிரதிவாதியிடம் கடன் தொகை கேட்டார்கள் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் பண வரவு செலவு உண்டு என்றால் இல்லை. நான் ரூ.1,50,000/-ம் கொடுப்பதற்கு முன்பு வாதிகள் சொத்துக்குரிய வில்லங்க சான்று சரிபார்த்து கொடுத்தேனா என்றால் சரிபார்த்து தான் கொடுத்தேன். நான் சரிபார்த்ததாக சொல்லக்கூடிய வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வில்லங்க சான்று சரிபார்த்த போது பிரதிவாதி ஏற்கனவே ரூ.6,50,000/-த்திற்கு அடமான பத்திரம் எழுதி பதிவு செய்து இருந்தது புலப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஏற்கனவே ரூ.6,50,000/-ம் அடமானம் இருந்த நிலையில் நான் ரூ.1,50,000/-ம் கொடுத்த தேதியன்று சொத்தின் மதிப்பு என்னவென்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அப்போது மதிப்பு ரூபாய்.15 லட்சம் முதல் 18 லட்சம் வரை இருந்தது. அடமான பத்திரத்தில் வட்டி 1% என்று எழுதப்பட்டது. அவ்வாறு தான் பேசவும் பட்டது. பேசிக்கொண்டவாறு 18.1.2019 தேதி முதல் 11.10.2019 வரை வட்டி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. செல்லடிக்கும் போது தான் வட்டி கொடுக்கப்பட்டது. நான் 10 மாதங்களாக வட்டி வரவில்லை என்று பிரதிவாதியிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எந்த தேதிகளில் அவ்வாறு சொன்னேன் என்று தேதி குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். ஆனால் மாதம்தோறும் கேட்டுகொண்டேன். நான் பிரதிவாதிக்கு

நெருங்கிய நண்பர் என்பதால் அவரது பினாமியாக இருந்து வாதிகளிடம் இருந்துமோசடியாக கிரையம் வாங்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதியின் ஏற்பாட்டின் பேரில் அவருடைய ஏஜெண்டாக இருந்து கொண்டு வாதிகளுக்கு தபசில் சொத்து சம்பந்தமாக உண்மையான கிரைய தொகையை கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.